கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
28-10-1973
40 காசு



நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.

PHL 4011 (T)

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.

தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது— உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.



அரைப்பங்கு
செலவில்
இருபங்கு
ஒளி!


சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

பிலிப்ஸ்

PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்


தீபாவளி வாழ்த்துக்கள்



மபத்லால் க்ரூப்

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...





கோகுலம்

மலர் 2 : இதழ் 15
அக்டோபர் 28, 1973
பிரமாதீச, ஐப்பசி 12




உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

அட்டையில் :
"என்ன பாக்கறீங்க? கங்கா ஸ்நானம்தான் ஆகுது!"

வண்ணப்படம் : துரைலிங்கம்



சந்தா விவரம் :

உள் நாடு :
ஒரு வருடம் ... ரூ. 10–00
ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை :
ஆண்டுச் சந்தா : ரூ. 15–00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :
ஆண்டுச் சந்தா ரூ. 25–00

★

மானேஜர், கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031

பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்த வாரியார்

சேந்தனார் சிறை மீட்டது

பட்டினத்துச் சுவாமிகள் துறவிகளுக்கெல்லாம் அரசர். பற்றற்ற பரம ஞானி.

**"பாரனைத்தும் பொய்யெனவே
பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருக்கும் துறக்கை அரிதரிது"**

என்கின்றார் தாயுமானார்.

"காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்ற வாசகத்தைப் படித்தவுடன் பட்டினத்தார், ஒன்பது கோடி பொன்னைத் துரும்பாகக் கருதித் துறந்து கௌபீனத்துடன் வீதியில் வந்து நின்றார்.

அவருடைய தலைமைக் கணக்குப் பிள்ளை சேந்தனார் அவரைப் பணிந்து "இந்தச் செல்வத்தை என்ன செய்வது?" என்று வினவினார்.

பட்டினத்தார் "எடுத்து வீதியில் எறிக" என்றார். ஏதாவதொரு திருப்பணிக்குத் தருக என்று சொல்லியிருக்கலாம். அவ்வாறு கூறாமல் தெருவில் போடு என்று ஏன் சொன்னார்?

"காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்று படித்தவுடன் அகமும் புறமும் துறந்துவிட்டார். துறந்த பின் 'அவற்றை அறப்பணிக்குக் கொடு' என்று சொல்ல அவருக்கு உரிமை இல்லை என்ற நுட்பத்தை உய்த்துணர்க.



பின்னர் பட்டினத்தாரது கட்டளையின்படி செல்வத்தை வீதியில் எறிந்தது பற்றி அரசன் சேந்தனாரைச் சிறையில் அடைத்துவிட்டான்.

பட்டினத்துச் சுவாமிகள் திருவெண்காடு என்ற திருத்தலம் சென்றார்.

அங்கே ஒரு சிறுவன் வந்து அவரைத் தொழுது அழுது நின்றான். அவனுடைய வயிறு முதுகுடன் ஒட்டியிருந்தது. கிழிந்த ஆடையும், வாடிய முகமும் உடைய அந்தச் சிறுவனைக் கருணையே வடிவான பட்டினத்தடிகள் கண்டு உள்ளம் உருகினார்.

"அப்பா! நீ யார்?"

"தாத்தா! என்னைத் தாங்கள் மறந்து விட்டீரா? தங்கள் தலைமைக் கணக்குப்பிள்ளை சேந்தனாரின் மகன்!"

"ஓ.... நீ சேந்தனாரின் மகனா? உன் தந்தைக்கு நான் மாதம் மூவாயிரம் பொன் ஊதியம் தந்தேனே? அவை தவிர ஏராளமான பொருளை அன்பளிப்பாகவும் கொடுத்தேனே? நீ ஏன் வறுமையில் வாடுகிறாய்?"

"தாத்தா! உங்கள் சொற்படி அப்பா நவநிதியை நடுத் தெருவில் இட்டார். அதனால் அப்பாவை அரசன் சிறையில் இட்டான். நாங்கள் பட்டினியால் பரிதவிக்கின்றோம்."

அச்சிறுவனுடைய அவல நிலையைக் கண்ட பட்டினத்தார் வருந்தினார். குடிகள் குற்றம் புரிந்தால் கொற்றவனிடம் முறையிடலாம். கொற்றவனே குற்றம் புரிந்தால் கடவுளிடம் தானே முறையிட வேண்டும்?

நேரே கோவிலுக்குச் சென்றார். இறைவனை நோக்கி இந்தப் பாடலைப் பாடினார்:

**மத்தளை தயிருண்டானும்
மலர்மிசை மன்னினானும்
நித்தலுந் தேடிக் காணா
நிமலனே அமல மூர்த்தி!
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்
சேந்தனை வேந்தன் இட்ட
கைத்தளை நீக்கி என் முன்
காட்டு வெண் காட்டுளானே**

இந்தச் செந்தமிழ்ப் பாடலைக் கேட்ட சிவபெருமான் தமது மூத்த குமாரராகிய விநாயகப் பெருமானைப் பார்த்தார்.


"விநாயக மூர்த்தி! சேந்தனை வேந்தன் இட்ட விலங்கையகற்றி அருள் செய்" என்றார்.


விநாயகப் பெருமான் நம்பிக்கை யுடைய சேந்தனுடைய சிறைச்சாலை வரை தும்பிக்கையை நீட்டினார். சிறைச் சாலையின் இரும்புக் கம்பிகளை மடமட வென்று ஒடித்தார். சேந்தனரைத் தும்பிக்கையால் பந்து போல் தூக்கிப் பட்டினத்தார் முன் விடுவித்தருளினார்.

இப்படிச் சேந்தனாரின் சிறை நீக்கிக் குறை நீக்கி ஆட்கொண்டருளினார்.

சேந்தனாருடைய சிறை தீர்த்தது போல் தம்மை வழிபடுகின்ற அடியார் களின் உடற் சிறையையும் நீக்கிக் கருணை புரிகிறவர் விநாயகர்.

விநாயகர் கருணைக் கடல்! கிருபா நிதி. தயாசாகரம். அருட்பெருங் குன் றம்; அவரை வழிபடுவார் குறை தீர்ந்து நிறைவு பெறுவர். (தொடரும்)





பயனுள்ள பொருள்

"மகேசுவரி"

முன்னொரு காலத்தில் ராஜசிம்மன் என்று ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு இரண்டு குமாரர்கள். இருவரும் ஒரே சமயத்தில் பிறந்த இரட்டையர்கள். அவர்கள் இருவரும் அரச குமாரர்களுக்குரிய சகல கலைகளிலும் சிறந்து விளங்கினார்கள்.

அரசன் ராஜசிம்மனுக்கு முதுமை காரணமாக அடிக்கடி சோர்வு உண்டாயிற்று. முன்போல் நாட்டின் நிர்வாகத்தை அவனால் கவனிக்க முடியவில்லை. அதனால் தன் குமாரர்களில் ஒருவனுக்கு முடிசூட்டிவிட்டு, எந்தத் தொந்தரவுக்கும் உட்படாமல் நிம்மதியாக வாழ முடிவு செய்தான். ஆனால் அவன் அப்படிச் செய்ய ஓர் இடையூறு இருந்தது. ராஜ குடும்பத்துப் பழக்கப்படி மூத்த குமாரனுக்குத்தான் முடி சூட்ட வேண்டும். இரட்டையர்களாகப் பிறந்திருக்கும் அரச குமாரர்களில் யார் மூத்தவன், யார் இளையவன் என்று எப்படித் தீர்மானிப்பது என்று புரியாமல் தவித்தான் அரசன்.

பிறகு மந்திரி, மற்றுமுள்ள அரசப் பிரதிநிதிகள் அனைவரையும் சேர்த்து ஆலோசனை நடத்தினான். எல்லோரும் ஒருமுகமான முடிவுக்கு வந்தார்கள். 'இரண்டு இளவரசர்களுள் யார் திறமைசாலியோ அவனே பட்டத்துக் குரியவன்' என்பதே அந்த முடிவு.

''ஜெயசீலன்தான் எல்லா வகையிலும் திறமைசாலி. ஆகையால் அவனே பட்டத்துக்கு உரியவன்'' என்று கூறினார் மந்திரி.

''குணசீலன்தான் திறமைசாலி. ஆதலால் அவன்தான் முடிசூட்டப்பட வேண்டியவன்'' என்று கூறினார் அரசர்.

எல்லோருக்கும் ஒரே குழப்பமாக இருந்தது.

இச்சமயம் அரண்மனைக் குரு அவ்விடம் பிரவேசித்தார். அவரை வரவேற்று, அமர வைத்த அரசன், ''ராஜ குருவே! தாங்கள் தான் இந்தப் பிரச்னைக்கு ஒரு வழிகாட்ட வேண்டும்'' என்று மிகுந்த பணிவுடன் வேண்டிக் கொண்டான்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு ராஜ குரு சொன்னார்: ''ஒவ்வொரு இளவரசரிடமும் பத்தாயிரம் பொற்காசுகளைக் கொடுங்கள். ஓர் ஆண்டு காலம் தவணையும் கொடுப்போம். அவரவர்களுக்கு விருப்பமான திசையில் அவரவர்கள் சென்று வரட்டும். பயனுள்ள பொருளை



டன் யார் திரும்பி வருகிறானோ, அவனே பட்டத்துக்குத் தகுதியானவன்.''

இதை அரசனும் மந்திரியும் மட்டுமல்லாது மற்றவர்களும்கூட ஒப்புக் கொண்டார்கள்.

குணசிலன் பத்தாயிரம் பொற்காசுகளுடன் தென்திசையை நோக்கிச் சென்றான். ஜெயசிலன் பத்தாயிரம் பொற்காசுகளுடன் வடதிசையை நோக்கிச் சென்றான்.

ஓர் ஆண்டு முடிவடைந்தது. இரண்டு இளவரசர்களும் தத்தம் பிரயாணத்தை முடித்துக் கொண்டு திரும்பி வந்திருந்தார்கள்.

அரசன் சபையைக் கூட்டினான். இளவரசர்கள் இருவரும் சபையின் முன்பு வந்து நின்றார்கள். அரசன் விசாரணையைத் தொடங்கினான்.

''ஜெய்சிலா! உன் பிரயாணம் வெற்றிகரமாக முடிந்து விட்டது. நீ என்ன 'பயனுள்ள பொருளை'க் கொண்டு வந்திருக்கிறாய் என்பதை நானும் இங்கு குழுமியிருப்பவர்களும் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறோம். விரைவில் காட்டுவாயாக.''

''அரசே! வணக்கம். தங்கள்மீது எனக்குள்ள எல்லையற்ற அன்பின் அடையாளமாக இதோ இந்தப் பொருளைத்தான் நான் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறிக் கையைத் தட்டினான் ஜெயசிலன்.

உடனே இருபது பணியாட்கள் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து சபையின் நடுவில் வைத்தார்கள், ஒரு பொருளை. அதன் மேல் மூடியிருந்த திரையை விலக்கினார்கள். மறுகணம் அங்கே தந்தத்தினால் ஆன ஓர் அழகிய சிம்மாசனம் காட்சி அளித்தது. தந்தத்தினால், மிக மிக நுட்பமாகவும், அழகாகவும் செய்யப்பட்டிருந்தது, அந்தச் சிம்மாசனம். அதில் ஆங்காங்கே நவரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்டிருந்தன.

எல்லோரும் திறந்த வாயை மூடாமல் அந்த அழகிய சிம்மாசனத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அடுத்துக் குணசிலனின் முறை. அவன் சபையின் முன்னால் வந்து ''தந்தையே! என்னைத் தயைகூர்ந்து மன்னிக்க வேண்டும். நான் 'பயனுள்ள பொருள்' எதுவும் கொண்டுவரவில்லை'' என்று அடக்கமாகச் சொன்னான்.

"ஒன்றும் கொண்டு வரவில்லையா? வேடிக்கையாக இருக்கிறதே!" என்று கேலியாகக் கூறிச் சிரித்தார் மந்திரி

"அப்படியானால்...?" என்று தயங்கினான் அரசன்.

"குணசீலா! ஓர் ஆண்டு காலத்தையும் பத்தாயிரம் பொற்காசுகளையும் நீ வீணாகவா செலவழித்து விட்டு வந்திருக்கிறாய்?" என்று வினவினார் ராஜகுரு.

பணிவுடன் கூறினான் குணசீலன்:

"குருதேவா! பத்தாயிரம் பொற்காசுகளையும் விலைமதிக்க முடியாத ஓர் ஆண்டு காலத்தையும் நான் வீணாகச் செலவழித்துவிட்டு வரவில்லை. நம் நாட்டில் குடிதண்ணீர் வசதியில்லாத சில கிராமங்களுக்கு அவ்விடத்து மக்களின் பேருதவியுடன் நீர்நிலைகள் அமைத்து விட்டு வந்திருக்கிறேன். மருத்துவ வசதியில்லாத சில சிற்றூர்களுக்கு அவ்விடத்து மக்களின் உதவியுடன் இலவச மருத்துவ மனைகள் கட்டிவிட்டு வந்திருக்கிறேன். போக்குவரத்து வசதியில்லாத சில கிராமங்களுக்குப் பயனுள்ள இடங்களில் சாலை அமைத்து விட்டு வந்திருக்கிறேன். இதற்கே என்னிடமுள்ள பொற்காசுகள் போதவில்லை. அந்தப் பணிகளை முடிக்க ஓர் ஆண்டு காலமும் போதுமானதாக இல்லை. நான் இன்று இங்கே வந்தே ஆகவேண்டும் என்பதற்காகத்தான் வந்திருக்கிறேன். ஜெயசீலனுக்குப் பட்டம் சூட்டி விடுங்கள். எனக்கு இன்னும் கொஞ்சம் பொற்காசுகள் கொடுத்து உதவுங்கள். வாழ்க்கையில் அத்தியாவசியமான வசதிகள் கூட இல்லாமல் துன்புறும் மக்களுக்கு நான் என் வாழ்நாள் முழுதுமே பணிவிடை செய்ய விரும்புகிறேன். தந்தையே! எனக்கு விடை கொடுங்கள்" என்று பணிந்து நின்றான்.



அரசன் ராஜகுருவையே பார்த்தான். ராஜகுரு அரசனையே பார்த்தார்.

"அரச குமாரனுக்குரிய இயல்புகளையெல்லாம் விட்டு விட்டு ஒரு சாதாரண குடிமகனைப் போல் வேலைகள் செய்தது மன்றி, கைப்பொருளையும் செலவழித்து விட்டு வெறுங் கையுடன் வந்திருக்கும் குணசீலன் அரச பதவிக்கே லாயக்கில்லாதவன் அரசே!" என்று இடையில் குறுக்கிட்டுக் கூறினார் மந்திரி.

"அரசனாவதற்குக் கைப்பொருளைச் செலவழிப்பது மட்டும் போதாது, மந்திரியாரே!" என்றார் ராஜகுரு.

"நீங்கள் சொல்வதன் உட்பொருள் எனக்கு நன்றாக விளங்குகிறது, குருதேவரே! ஜெயசீலன் தன் கைப்பொருளைத் தனக்காகச் செலவழிக்கவில்லை. மன்னர் அவர்களுக்கு ஓர் அழகிய சிம்மாசனத்தைக் கொண்டு வருவதற்காகத் தான் செலவழித்திருக்கிறான். குணசீலனோ இப்படியல்ல. எதுவுமே கொண்டு வரவில்லை. 'பயனுள்ள பொருள்' கொண்டு வர வேண்டுமென்பதுதானே பொது விதி?" என்று கொஞ்சம் கோபமாகவே கேட்டார் மந்திரி.

"பதற்றமடையாதீர்கள், மந்திரியாரே! ஜெயசீலன் கொண்டு வந்திருக்கும் பொருள் கண்ணுக்குத் தெரியக் கூடியதாக இருக்கிறது. குணசீலன் கொண்டு வந்திருக்கும் பொருளோ கண்ணுக்குத் தெரிய முடியாததாக இருக்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம்" என்று சொன்னார் ராஜகுரு நிதானமாக.

"குணசீலன் என்ன பொருள் கொண்டு வந்திருக்கிறான்?" என்று புரியாமல் தவித்தார் மந்திரி.

"மக்களின் நல்லெண்ணமும், அளப்பரிய அன்புமே அவன் கொண்டு வந்திருக்கும் பொருள்கள் மந்திரியாரே! ஓர் அரசனுக்கு வீரமும், நிர்வாகத் திறமையும், படாடோபமும் மட்டும் இருந்து விட்டால் போதாது. தன்னுயிரைப் போல் பிற உயிரையும் காக்கும் தயாள குணமும் வேண்டும். ஜெயசீலன் அரசனுக்கு மட்டும் பயன்படக் கூடிய சிம்மாசனத்துக்காகத் தன் கைப்பொருள் முழுதும் செலவழித்திருக்கிறான். குணசீலனோ நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு நன்மையைச் செய்வதற்காகத் தன் கைப்பொருள் முழுதும் செலவழித்திருக்கிறான். இதில் எது உயர்ந்தது என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள், மந்திரியாரே!" என்று கூறினார் ராஜகுரு.

"குருதேவா! நீங்கள் சொல்வதையே நானும் ஒப்புக் கொள்கிறேன். ஜெயசீலன் கொண்டு வந்திருக்கும் தந்தச் சிம்மாசனம் எனக்கு அதிகப்படியானது. குணசீலன் கொண்டு வந்திருக்கும் மக்களின் நல்லெண்ணமும் அன்புமே எனக்கு இப்போது மிக மிக அத்தியாவசியமானவை. ஆதலால் குணசீலனுக்கே முடிசூட்டப் போகிறேன்" என்று கூறினான் அரசன்.

"முடியாது, முடியாது!" என்று கத்தினார் மந்திரி

"இருவரும் என் குமாரர்கள். இருவரில் யாருக்கு முடிசூட்டினால் உமக்கு என்ன மந்திரியாரே! ஜெயசீலன்மீது மட்டும் உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை மந்திரியாரே?" என்று புரியாமல் கேட்டான் அரசன்.

"அரசே! முதலில் மந்திரியாரையும் ஜெயசீலனையும் கைது செய்யுங்கள். பிறகு உண்மையை நான் விளக்குகிறேன்" என்று சொன்னார் ராஜகுரு.

''குருதேவா! என்ன இது?'' என்று அரசன் தடுமாறினான்.

''முதலில் நான் சொன்னதைச் செய்யுங்கள்'' என்று மீண்டும் வற்புறுத்தினார் ராஜகுரு.

அதன்படியே மந்திரியாரும் ஜெயசீலனும் கைது செய்யப்பட்டார்கள்.

அரசன் குருதேவரை நோக்கினான்.

ராஜ குரு சொன்னார்:

''அரசே! ஜெயசீலன் உமது மகன் அல்ல. குணசீலன் மட்டுமே உமது மகன்.''

'' உண்மையாகவா ?'' சபையே அலறியது.

''ஆம், மன்னா! பதவி ஆசை பிடித்த மந்திரி பெரிய சூழ்ச்சிக்காரர். மகாராணி குணசீலனைப் பிரசவித்தபோது அவருடைய சூழ்ச்சியும் உருவாகியது. மருத்துவச்சியைத் தன் கைக்குள் போட்டுக்கொண்டு, தன் குழந்தை ஜெயசீலனையும் மகாராணிதான் பிரசவித்தார் என்று நீங்களே நம்பும்படி நாடகமாடிவிட்டார். மயக்கம் அடைந்திருந்த மகாராணியும் தமக்கு இரண்டு குமாரர்கள் பிறந்ததாகவே அன்றும் நம்பினார், இன்றும் நம்புகிறார். ஆனால் உண்மை அதுவல்ல. குணசீலனே ராஜகுமாரன். ஜெயசீலன் ராஜ குமாரன் அல்ல'' என்று விளக்கினார் ராஜகுரு.

'' இவ்வளவையும் அறிந்திருக்கும் தாங்கள் அப்போதே என்னிடம் உண்மையை வெளியிட்டிருக்கலாமே?.....'' என்றான் அரசன்.

''இருக்கலாம். ஆனால் உண்மை எனக்குத் தெரிந்து விட்டது என்பதை அறிந்தால் குணசீலனுக்கு ஏதேனும் ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சினேன். தக்க சமயத்தில் உண்மையை வெளியிட எண்ணினேன். அதனால் தான் இப்படியொரு போட்டியையும் ஏற்படுத்தினேன். நான் நினைத்தபடியே எல்லாம் நடந்தன. ஆதலால் குணசீலனே பட்டத்துக்கு உரியவன்'' என்றார் ராஜகுரு.

''இளவரசர் குணசீலன் வாழ்க !'' என்ற வாழ்த்தொலி அரண்மனையை அதிர வைத்தது.

எல்லோரையும் வணங்கினான் குணசீலன்.

வேடிக்கையாகத்தான் தொடங்கினார்

40 ஆண்டுகளுக்கு முன் அது நிகழ்ந்தது. கான்ஸாஸ் பல்கலைக் கழகத்திலிருந்து அப்பொழுதுதான் பட்டம் பெற்று வந்திருக்கிறார். அடுத்த வீட்டுச் சிறுவனுக்காக ஒரு பொம்மை பண்ணிக் கொடுத்தார். அன்று தொடங்கியது இன்றுவரை வாழ்நாள் பணியாகவே நிலைத்து விட்டது. 20 பேர்களைக் கூட வேலைக்கு வைத்துக்கொண்டு ஆண்டுக்கு இரண்டரை லட்சம் பொம்மைகளும் பாவைகளும் தயாரிக்கிறார் திருமதி ஹாஸெல் ரோவின்ஸ். அமெரிக்கா நெடுகிலும் இவை விற்பனையாகின்றன. சில பொம்மைகள் கதைப் புத்தகங்களில் வரும் பாத்திரங்களை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்டவை. ஆனால் பெரும்பாலான பொம்மைகள் அவருடைய சொந்தக் கற்பனையின் படைப்புகளாகும். அமெரிக்காவிலே இவர் தான் இவ்வளவு அதிகப் பொம்மைகள் தயாரிக்கிறார். மிஸௌரி மாநிலத்தில் கான்ஸாஸ் நகரில் வாழ்கிறார் திருமதி ஹாஸெல்.

உதவி: அமெரிக்கத் தகவல் நிலையம்



நானும் சந்திர மண்டலம் போனேன்

க. அ. நாராயணன்



ஒரு காட்டில் ஓர் எலி வசித்து வந்தது. காட்டுக்கு அருகில் பொன்னியூர் என்று ஒரு சிற்றூர் இருந்தது. ஒரு நாள் எலி பொன்னியூருக்கு வந்தது. அப்போது அவ்வூர் மக்கள் அனைவரும் மனிதன் சந்திரனில் இறங்கியதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். எலிக்கும் சந்திர மண்டலம் போய் வர வேண்டும் என்று ஓரே ஆசை. ஆனால் எப்படிச் சந்திர மண்டலம் போவது என்று அதற்குப் புரியவில்லை. கவலையுடன் காட்டிலுள்ள தன்னுடைய வீட்டை அடைந்தது. கவலையுடன் இருக்கும் எலியை நரி கண்டது.

''என்ன எலியாரே! ஏன் விசனமாக இருக்கிறீர்?'' என்று கேட்டது நரி.

''எனக்குச் சந்திர மண்டலத்துக்குப் போக வேண்டுமென்று ஆசையாக உள்ளது. ஆனால் எப்படிப் போவதென்று தெரியவில்லை. இதற்கு நீங்கள்தான் வழி சொல்ல வேண்டும்'' என்று நரியைக் கேட்டுக் கொண்டது எலி.

''இது பற்றியா கவலைப்படுகிறீர்கள்? சந்திர மண்டலத்துக்கு இராக்கெட்டில் போகலாமே?'' என்று கூறியது நரி.

''இராக்கெட்டை எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டது எலி.

''நானாக்குப் பொன்னியூருக்குப் போய் எல்லாவற்றையும் விவரமாகக் கேட்டுக்கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே நரி வேகமாகச் சென்று விட்டது.

அப்போது தீபாவளி சமயமானதால் எல்லா வீடுகளிலும் 'இராக்கெட்' வெடிகள் இருந்தன. அவர்கள் எப்படி அவற்றை வெடிக்கிறார்கள் என்பதை நன்றாகக் கவனித்துக் கொண்டு ஒரு தீப்பெட்டியையும் இரண்டு கட்டு இராக்கெட் வெடிகளையும் வாங்கிக் கொண்டு காட்டுக்குத் திரும்பி வந்தது நரி.

எலி சந்திரனுக்குப் போகும் செய்தி காடு முழுதும் பரவி விட்டது. எலியும் நரியும் இராக்கெட் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. அடியில்,





சோளத் தட்டைகளையும் அதற்குமேல் சிறு வீடு போல் உலர்ந்த குச்சிகளையும் வைத்துக் கட்டின. ஒரு வழியாக இராக்கெட் தயாராகி விட்டது. ஒரு கட்டு இராக்கெட் வெடியை எடுத்து அதில் உள்ள திரிகளை யெல்லாம் ஒன்று சேர்த்து அதை இராக்கெட்டில் கட்டியது நரி.

வழியில் எலிக்குத் தேவையான உணவுப் பொருள்களை வனவிலங்குகள் சேகரித்துக் கொடுத்தன. அவற்றை யெல்லாம் வாங்கி இராக்கெட்டினுள் வைத்துக் கொண்டது எலி. பௌர்ணமி நாளன்று சந்திர மண்டலத்துக்குச் செல்வது என்று எல்லா விலங்குகளையும் கலந்து ஆலோசித்து எலி முடிவுக்கு வந்தது.

ஓர் இடத்தில் மண்ணைக் குவித்துச் சிறிய மலை போல் அமைத்து அதன் மீது யானையார் இராக்கெட்டை எடுத்து வைத்தார். எலியும் இராக்கெட்டினுள் உட்கார்ந்து கொண்டது. சன்னல் கதவைத் திறந்து கொண்டு வெளியில் பார்த்தது. காட்டிலுள்ள எல்லா மிருகங்களும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டது எலி. பிறகு நரியின் யோசனைப்படி சன்னல் கதவை மூடிவிட்டது. திரும்பிப் பூமிக்கு வருவதற்கான இன்னொரு ராக்கெட் வெடிக் கட்டும் தீப் பெட்டியும் உள்ளனவா என்று ஒரு முறை பார்த்துக் கொண்டது.

பௌர்ணமி நாளாகையால் ஆறு மணிக்கே சந்திரன் வந்து விட்டான். நரி ஒரு தேங்

காயை உடைத்துப் பிள்ளையாரை வழி பட்டது. அதைத் தொடர்ந்து எல்லா விலங்குகளும் பிள்ளையாரை வணங்கின. எலியும் இராக்கெட்டில் இருந்தபடியே வணங்கியது. யானையார் ஒரு தீப்பெட்டியை எடுத்து 'இராக்கெட்' திரியைப் பற்ற வைத்தார். இராக்கெட் மிகவும் வேகமாகப் புகையைக் கக்கிக் கொண்டு, மேலே கிளம்பியது. எல்லா விலங்குகளும் இராக்கெட் செல்லும் வழியையே பார்த்துக் கொண்டிருந்தன. சிறிது தூரம் சென்ற பின்பு அவை கண்களிலிருந்து இராக்கெட் மறைந்து விட்டது. அப்போது மேகம் நிலவை மூடிக் கொண்டது. இராக்கெட்டின் புகைதான் நிலவை மூடிக் கொண்டது என்று விலங்குகள் நம்பின.

உயரத்தில் சென்ற இராக்கெட் சிறிது நேரத்தில் வேகமாகக் கீழே இறங்கியது. எலிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. சன்னல் கதவைத் திறந்து பார்க்க ஆசை. ஆனால் அதற்குப் பயமாக இருந்தது. சிறிது நேரம் சென்றதும் இராக்கெட் ஒரு குலுக்கலுடன் நின்றது.

சன்னல் கதவைத் திறந்து பார்த்தது. வெளியில் மிகவும் வெளிச்சமாக இருந்ததால் சன்னல் கதவை மூடி விட்டுத் தூங்கியது. எப்போதுமே கேட்காத ஓர் ஓசை அப்போது கேட்டது. அது தவளைகள் கத்தும் ஒலி என்பது அதற்குத் தெரியாது. ஏனெனில் எலி வசிக்கும் காட்டில் தவளைகளே இல்லை.

தூக்கம் கலைந்து எழுந்த எலிக்கு ஒரே பசி. இராக்கெட்டில் கொண்டு வந்திருந்த பழங்களைத் தின்றது. இரண்டு வாழைப் பழங்களை எடுத்துக் கொண்டு இராக்கெட்டிலிருந்து கீழே இறங்கியது.

'சந்திர மண்டலம்' பெரிதாகவே இருந்தது. அதற்கு நடுவில் சிறிது நீரும் இருந்தது. எலியைப் பார்த்த தவளைகளுக்கு ஒரே பயம். சிறிது நேரத்தில் தன்னைப் பற்றியெல்லாம் கூறி இரண்டு வாழைப் பழங்களையும் தவளைகளுக்கு அன்பளிப்பாகத் தந்தது. பாவம் எலி! அது வந்திருக்கும் இடம் ஓர் ஆழமான கிணறு என்று அதற்குத் தெரியவில்லை.

தவளைகளுக்கு எலியை மிகவும் பிடித்து விட்டது. அதனுடன் அவை விளையாடின. எலியும் தவளைகளுடன் அன்பாகப் பழகியது. சில நாட்கள் சென்றன. எலி தன்னுடைய சொந்த இடமான பூமிக்குச் செல்வது பற்றித் தெரிவித்தது. தவளைகளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இரண்டு தவளைக் குட்டிகள் எலியுடன் வருவதாகத் தெரிவித்தன. அங்கு இருக்கும் மண்ணை மலை போல் குவித்து அதன் மீது இராக்கெட்டை ஏற்றி வைத்தது எலி. தவளைகள் இரண்டும் இராக்கெட்டில் ஏறிக் கொண்டன. எலி கூறியது போல் தவளை இராக்கெட்டில் இருக்கும் திரியைக் கொளுத்தியது.

சந்திர மண்டலத்துக்குச் சென்ற எலி திரும்பாதது பற்றிக் காட்டில் உள்ள விலங்குகளெல்லாம் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தன. எங்காவது இராக்கெட் தெரிகிறதா என்று எப்போதும் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.

கிணற்றுக்குள்ளிருந்து வானத்தை நோக்கிப் புகையுடன் கிளம்பிய இராக்கெட் வேகமாகக் கீழே இறங்கியது. எலி மெதுவாகத் தவளைகளை அழைத்துக் கொண்டு சன்னல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தது. சுற்றிலும் ஒரே மரம். எலியின் மகிழ்ச்சி பன்மடங்கு அதிகரித்தது. கதவைத் திறந்து கொண்டு தவளைகளுடன் வேகமாகக் காட்டை நோக்கிச் சென்றது.

தூரத்தில் எலி வருவதைக் கண்ட விலங்குகளின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. எலியையும் இரண்டு புதிய பிராணிகளையும் விலங்குகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றன. நரி வேகமாகச் சென்று ரோஜாப் பூ மாலைகளைக் கொண்டு வந்து எலிக்கும் தவளைகளுக்கும் போட்டது. யானையார் எலியையும் தவளைகளையும் ஏற்றிக் கொண்டு காட்டை ஊர்வலமாக வந்தார். மாலையிலுள்ள ரோஜா இதழ்களை எலி தின்றுகொண்டு கம்பீரமாக அமர்ந்து கொண்டிருந்தது.

காட்டில் அன்றிரவு ஒரு விருந்து நடைபெற்றது. விருந்தின்போது எலி தன்னுடைய சந்திரப் பயணத்தைப் பற்றி விரிவாக விளக்கியது. எல்லா விலங்குகளும் மகிழ்ச்சியாக எலியைப் பாராட்டின. தவளைகளுக்கு அந்தக் காடு மிகவும் பிடித்திருந்தது. ஒரு சிறிய குளத்தின் ஓரமாகக் குரங்கு இரண்டு வீடுகளைத் தவளைகளுக்குக் கட்டிக் கொடுத்தது. விலங்குகளும் தவளைகளுடன் இனிமையாகப் பழகின.

காட்டில் எலிக்கு ஒரு தனி மதிப்பு இருந்து வந்தது. பொழுது போகவில்லையென்றால் எல்லா விலங்குகளும் எலியைச் சூழ்ந்து கொள்ளவும் எலி அதன் சந்திர மண்டலப் பயணத்தைப் பற்றிச் சொல்வதும் பழக்கமாகி விட்டது.



சிங்கமும் புலியும்

அழ. வள்ளியப்பா

நல்ல வெய்யில் நடுப்பகலில்
நாக்கு வறண்ட புலியொன்று
தண்ணீர் தேடிக் காடெல்லாம்
தவித்தே அலையும் வேளையிலே,
குட்டை ஒன்றைக் கண்டதுவே.
கொஞ்சம் நீர்தான் இருந்ததுவே.
ஆவல் கொண்டு தண்ணீரை
அருந்தப் போகும் சமயத்தில்,
எங்கோ இருந்து ஒரு சிங்கம்
இரைக்க இரைக்க வந்ததுவே.
அதுவும் தண்ணீர் அருந்திடவே
ஆசை மிகவும் கொண்டதுவே.
தண்ணீர் குடிக்கும் போட்டியிலே
சண்டை இரண்டும் போட்டனவே.
ஒன்றை ஒன்று தாக்கினவே
ஓங்கி ஓங்கி அறைந்தனவே.
சிங்கம் செய்த கர்ஜனையும்
சீறும் புலியின் உறுமல்களும்
அங்கே, அந்தப் பகுதியையே
அதிரச் செய்து விட்டனவே.
அரைமணி நேரச் சண்டையிலே
அயர்ந்தன; அங்கே அமர்ந்தனவே.
எதிரெதி ராகப் படுத்தனவே
இரண்டும் முறைத்துப் பார்த்தனவே
அந்தச் சமயம் வானத்தில்
ஆசை யாக வட்டமிடும்
கழுகுக் கூட்டம் ஒன்றினையே
கண்டன புலியும் சிங்கமுமே.

உடனே சிங்கம் நிலைமைதனை
உணர்ந்தே புலியிடம் உரைத்ததுவே.
''நண்பா, நமக்குள் ஏன் சண்டை?
நன்றாய் நீயே குடித்திடுவாய்.
மிச்சம் இருந்தால் நான்குடிப்பேன்.
மேலே பார்,பார் கழுகுகளை.
'சண்டை போடும் இருவரிலே
சாவது ஒருவர் நிச்சயமே.
கொத்திக் கொத்தி இரத்தமெலாம்
குடித்துக் குடித்து மகிழ்ந்திடலாம்'
என்றே எண்ணிக் கழுகுகளும்
இங்கே வட்டம் இடுவதனைக்
காண்பாய் நண்பா, இனியும்நாம்
கடும்போர் புரிவது சரியாமோ?''
இப்படிச் சிங்கம் கூறியதும்
எழுந்தே புலியும் உரைத்ததுவே.
''ஆமாம், ஆமாம், உண்மைதான்
அறிந்தேன் நன்கு உணர்ந்தேன்நான்
தண்ணீர் குடிக்க நமக்குள்ளே
சண்டை வேண்டாம். இருவருமே
ஒன்றாய்த் தண்ணீர் குடித்திடுவோம்,
ஒற்றுமையாகப் பழகிடுவோம்''
என்றது. உடனே புலிசிங்கம்
இரண்டும் ஒன்றாகக் கூடினவே.
தண்ணீர் தன்னைக் குடித்தனவே,
தாகம் தீர்ந்து கொண்டனவே.
கண்டதும் இதனை ஏமாந்தே
கழுகுகள் பறந்து மறைந்தனவே!


(கருத்து — ஈசாப்)



முருகனுக்கு வயது பத்துதான் இருக்கும். அழகான உடற்கட்டு. பார்வையில் அறிவின் ஒளி வீசும். கல்வி கற்க வேண்டும் என்ற கொள்ளை ஆவல் அவனுக்கு. பள்ளியில் சேர அவனுக்கு வாய்ப்பே கிடையாது. காரணம், அவன் தந்தை ராமன் பிச்சையெடுப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தான். ராமன் காலையில் எழுந்து ரயில் நிலையத்தில் நின்று பிச்சைஎடுத்துப் பைசாக் காசுகளைச் சேர்த்துக் கொண்டு வந்து முருகனிடம் கொடுப்பான். முருகன்தான் அவைகளைக் கணக்கு வைத்துக்கொண்டு செலவு செய்வது வழக்கம். இந்த நிலையில் அவன் கல்வி ஆர்வம் நிறைவேறுவது எப்படி?

முருகன் கடவுளை வேண்டினான். அப்படியும் தெருப் பிச்சைக்காரனாகத்தான் வாழ வேண்டி வந்துவிடுமோ என்ற அச்சம் அவன் மனத்தில் தோன்றியது. அன்று ஒருநாள் காலை முருகன் மனத்தில் பெரிய கேள்வி எழுந்தது. 'எப்படி வாழ்வது?' என்பதுதான் கேள்வி. ஆனால் ''பிச்சை எடுப்பதில்லை; உயிர் போனாலும் போகட்டும், பிச்சை எடுத்து வாழக் கூடாது. கல்வி கற்க வேண்டும்; தொழில் செய்து பிழைக்க வேண்டும்'' என்று ஒரு சபதம் எடுத்துக் கொண்டான். கல்வியில்லாமல் தொழில் கற்பது எப்படி? இப்படி மனம் குழம்பினான். அவன் தந்தை ராமனிடம் இந்தச் சபதம் பற்றிச் சொன்னால் அவன் நிச்சயம் இதை ஏற்கவே மாட்டான். எங்கேயாவது போய்ப் பிச்சை எடுத்து இரண்டு ரூபாய் சம்பாதித்துக் கொண்டுவாஎன்றுதான் சொல்லுவான்.

முருகன் தந்தையிடமும் தன் முடிவைச் சொல்லவில்லை. கல்வி, தொழில், நல்ல பிழைப்பு இந்த எண்ணங்கள்தான் அவன் மனத்தில் சுழன்று சுழன்று வந்தன. இல்லாவிட்டால் சாவு என்று எண்ணித் தன் குடிசையை விட்டுப் புறப்பட்டான். மெள்ள நடந்து கொண்டே சென்றான். வழியில் ஓர் ஆற்றுப் பாலம் குறுக்கிட்டது. ஆற்றில் புது வெள்ளம் நுங்கும் நுரையுமாகச் சுழித்துச் சென்றது. ஆற்று வெள்ளத்



தைக் கண்டதும், அவன் மனம் வேகமாக வேலை செய்தது. கல்வி, தொழில் அல்லது சாவு என்று எண்ணினானே? இந்தப் பாலத்தில் ஏறித் தண்ணீரில் குதித்துவிடுவோமா, இறந்துபோய்விட்டால் என்ன என்று எண்ணிக் கொண்டே பாலத்தின் நடுவில் வந்து நின்று கொண்டு ஓரத்தில் பாதுகாப்புக்காகக் கட்டப்பட்ட இரும்புக் கம்பிகளின் மீதும் ஏறி விட்டான். ஏறி, கரைபுரண்டு ஓடும் தண்ணீரில் பாய வேண்டியதுதான்.

ஆனால், அவன் அங்கே கண்டது என்ன? பயங்கரமான காட்சி. சுழலும் வெள்ளத்தில் தலைமயிர் தெரிந்தது. ஒரு கவுன் தெரிந்தது. ஒரு பெண் சுழலில் சிக்கித் துடித்துக்கொண்டிருந்தாள். உயிரைத் துறக்க விரும்பிய முருகனுக்கு இதுவே ஒரு சவாலாகப் போய்விட்டது. ஓர் உயிரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு வந்துவிட்டது. 'என் உயிரைவிடத்தானே வந்தேன்? இது போனால் போகட்டும்' என்று ஒரு கணமும் யோசிக்காமல், பாலத்திலிருந்து 'குபீல்' என்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் பெண்மணியைப் பிடித்துக் கட்டிக் கொண்டு, கரையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டான். பலர் கரையில் நின்று, 'ஆபத்து', 'ஆபத்து' என்று கூவினாலும், முருகன் தான் தன் உயிரைப் பொருட்படுத்தாமல், அந்த வீரச் செயலைச் செய்ய முடிந்தது.

அன்று இறைவன், முருகன் வேண்டுகோளுக்கு இணங்கிவிட்டான் போலும்.

முருகனுக்கு எங்கு பார்த்தாலும் பாராட்டுக்கள். எல்லோரும் அவனைப் போற்றினார்கள். பத்திரிகைகளில் அவன் புகைப்படம் போட்டு, 'பெண்ணின் உயிரைக் காப்பாற்றிக் கரை சேர்த்த வீரச் சிறுவன்' என்று எழுதியிருந்தார்கள். பத்திரிகை நிருபர்கள் அவனைப் பேட்டி கண்டார்கள். ''உனக்கு நீந்தக் கற்றுக் கொடுத்தது யார் தம்பி, எப்படி இந்தச் செயலைப் புரிந்தாய்?'' என்று கேட்டார்கள். முருகன் பாலத்துக்கு ஏன் வந்தான்

என்ற ரகசியம் அவர்களுக்குத் தெரியாது அல்லவா !

அரசாங்கம் முருகன் தீரச் செயலைப் பாராட்டி, அவனுக்கு வீரப் பதக்கம் அளிக்கத் தீர்மானித்தது.

இவற்றில் எல்லாம் முருகன் களிப்படையவில்லை. ''எனக்குப் பரிசுகள் வேண்டாம். படிப்புத்தான் வேண்டும். பரிசுகள் கொடுத்தால் விற்றுச் செலவு செய்து விடுவேன். அப்புறம் என்ன செய்வது ? படிப்பு இருந்தால் அதைச் செலவு செய்ய முடியாது அல்லவா ? ஆகையால் எனக்குப் படிப்பு வேண்டுமே தவிர, பரிசுகள் தேவையில்லை!'' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான் முருகன்.

அவனைப் பேட்டி கண்ட நிருபர்களுக்கெல்லாம் இது புதுமையாகத் தோன்றியது. ''வீரச் சிறுவன் வேண்டுவது கல்வி. பரிசுகள் பெறுவதற்கு மறுக்கிறான்'' என்று செய்திப் பத்திரிகைகளில் வெளியிட்டனர். இன்னொரு காரணமும் சொன்னான் முருகன்.

அதிசயச் சிறுவன்

ஜி. பாஸ்கர்



''கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்வதற்குத் தானே நாம் இருக்கிறோம்? இதற்குப் போய்ப் பரிசு கொடுக்கிறீங்களே!'' என்று சொல்லிச் சிரித்துக் கேலி செய்து விட்டான். இதைச் சொன்ன போது அவன் காப்பாற்றிய பெண்ணின் தந்தைக்கு வெட்கமாகப் போய் விட்டது. அவர் ஒரு மாலையை முருகன் கழுத்தில் போட்டுக் கையில் பணமும் கொடுக்க வந்த போது தான் முருகன் அப்படிச் சொல்லிச் சிரித்தான்.

அந்த மனிதர் உடனே உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னார். 'முருகா! உனக்கு என்ன வேண்டும்? படிப்புத் தானே ? நானே உன்னைப் படிக்க வைக்கிறேன்!'' என்று சொல்லி முருகனைத் தன் வீட்டிலேயே வளர்த்து, அவனைக் கல்விக்கூடத்திலே சேர்த்துப் படிக்க வைத்தார்.

இவை யெல்லாம் நடந்து முப்பது வருடங்களாகி விட்டன ! இன்று முருகன் ஒரு பட்டதாரி. சொந்தமாகத் தொழில் செய்கிறான். அதோடு நின்று விடவில்லை. சர்வதேச நீச்சல் போட்டியில் கலந்து கொள்வதற்காக அவன் அயல்நாடு செல்லப் போகிறான். அப்பொழுது விமான தளத்தில் பத்திரிகை நிருபர்கள் முருகனை, ''உங்களுக்கு நீச்சல் பயிற்சி எத்தனை வருடங்களாகப் பழக்கம்? இதில் ஆர்வம் எப்படி ஏற்பட்டது ?'' என்று கேட்டார்கள்.

முருகன் சொன்னான்: ''அது ஒரு பெரிய கதை. என் வாழ்க்கை தொடங்கியதே நீச்சலில்தான். வாழ்க்கையிலும் எதிர்நீச்சல் போட்டவன் நான். வாழும் வகை தெரியாமல் தண்ணீரில் குதித்தேன். தண்ணீர்எனக்கு வாழ்வு கொடுத்தது. அன்றிலிருந்து நீச்சலில் எனக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. நீச்சல்தான் எனக்குத் துணை. ஆகவே எந்தப் போட்டியிலும்நான் வெற்றி பெறுவேன். எனது வெற்றி நிச்சயம்.''


22
ஷீலாவைக் காணோம்
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
டைகர் உணவுமூட்டையுடன் ஷீலாவிடம் ஓடியது. அதைப் பின் தொடர்ந்து போனால் ஷீலா இருக்குமிடம் அறிந்து கொள்ளலா மென்று அக்கயவன் டைகரைப் பின் தொடர்ந்து போகிறான்.
நிலவொளியில் தூரத்தில் டைகரைக் கண்ட ஷீலா கயிற்று ஏணியைக் கீழே இறக்குகிறாள், அது ஏறி வர. அந்த ஒளி விடத்தை அக் கொடியவன் தெரிந்துக் கொள்ளுகிறான்.
டைகர் நாய் ஏணியில் ஏறிக் கொண்டிருந்த போது...
சீ, நாயே! போ, தூர..
யாருக்கும் தெரியாமல்
ஒரு மறைவிடம் இப்
படி ஒன்று இருக்கிறதா
இங்கு...
தன்னைப் பிடிக்க வரும் தீயவனைக் கண்ட ஷீலா, ஒரு மூலையில் கிடந்த கைக் கோடரியால் ஏணிக் கயிற்றை வெட்டித் துண்டித்தாள்.
ஏணி துண்டிக்கப் படவே டைகரும் அவனும் தலைகுப்புறக் கீழே விழுந்தார்கள்.


ஷீலாவும் துணிச்சலுடன் மரக்கிளையிலிருந்து கீழே குதித்தாள். ஏணியிலிருந்து விழுந்தவன் சுதாரித்து எழுந்து அவளைப் பிடிக்கத் தாவினான்
ஆனால் டைகரை மறந்தான் அந்த மடையன். அவிழ்ந்து கிடந்த கயிற்று ஏணியிடையே கால் இருப்பதையும் பார்க்கவில்லை. ஷீலாவைப் பிடிக்க அவன் பாய்ந்த போது டைகர் கயிற்றைப் பிடித்து இழுக்கவே அவன் நிலை தடுமாறிக் கீழே 'மடேர்' என்று விழுந்தான்...
டைகர், சரியான வேலை செய்தாய் இவனை நன்றாக கட்டி விட்டேன். ஆள் நினைவிழந்து போனதால் இவ்வளவு இலகுவாகக் கட்ட முடிந்தது.
வெறுமே கட்டி உருட்டி விட்டால் தப்பி விடுவான் என்று நான் இப்படி மரத்தோடு சேர்த்து நன்றாகப் பிணைத்து விட்டேன்.
ஓடி வா டைகர். சீக்கிரம் நாம் போலீஸ் ஸ்டேஷனுக்கு வழி கேட்டுக் கொண்டு போய் இவனை அழைத்துப் போக அவர்களை அனுப்பி வைக்கலாம்.
ஆனால் வழியிலே அபாயம் வந்துக் கொண்டிருப்பது ஷீலாவுக்குத் தெரியாது.


தொடரும்...

நேரு மாமாவைப் போட்டுப் பாரு!

— தாணு



அடுத்த இதழில் யார்?



ரம்ஸான் பண்டிகை

மீனா

அன்று அந்த வீதியே குதூகலத்தால் நிரம்பி வழிந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே வண்ண மயம். சிறுமிகளும் சிறுவர்களும் வாண வேடிக்கைகள் செய்து கொண்டிருந்தனர். எல்லோரது கைகளிலும் இனிப்புப் பண்டங்கள். அப்துல் ஏக்கத்துடன் அனைவரையும் பார்த்தான். உடனே தன் பையையும் தடவிப் பார்த்துக் கொண்டான். முக்கால் ரூபாய் இருந்தது. முதல் நாள் நடந்த நிகழ்ச்சியை எண்ணிப் பார்த்தது அவன் மனம். குடிசையில் அமர்ந்திருந்த பாட்டியின் தோற்றம் அவன் கண் முன்னால் வந்தது. அப்துல் காலையில் தூங்கி எழுந்தான். அவன் பாட்டி அவனுக்காக அடுப்பில் பாலைக் காய்ச்சிக் கொண்டிருந்தாள். பேரன் எழுந்து விடுவான் என்று அன்புடன் அவனுக்கு உடனே பாலைக் கொடுக்கும் எண்ணத்துடன் தனது புடவையின் தலைப்பால் பாலை இறக்கினாள் பாட்டி. கையில் பால் கொட்டி விட்டது. பரபரப்புடன் கையைத் தடவிக் கொண்டாள். இதை அப்துல் கவனித்தான்.

அன்று போய் மறுநாள் ரம்ஸான் பண்டிகை. பாட்டி தைத்து வைத்திருந்த துணிகளை அவரவர் வீடுகளில் கொண்டு கொடுப்பதற்காக அப்துல் சென்றான். அவன் சென்ற ஒரு வீட்டில் குழந்தைகள் புதிய துணிகளைக் கண்டதும் அளவில்லாத ஆனந்தத்துடன் அதைப் பார்த்து மகிழ்ந்தனர். அந்த வீட்டின் பெரியவர் அவனிடம் முக்கால் ரூபாயைக் கொடுத்தார். பாட்டி அப்துலுக்கு அதையே பண்டிகையின் பரிசாகக் கொடுத்தாள்.

அன்று மைதானத்தில் எங்கு பார்த்தாலும் மிட்டாய்க் கடைகள். அப்துல் நிதானமாக நடந்து வந்தான். கடையின் அருகே சென்றான். மிட்டாய் வாங்கிச் சாப்பிட வேண்டும்போல் தோன்றும். உடனே, தன் மனத்தை மாற்றிக் கொண்டு வேகமாகப் போய்விடுவான். இரும்புப் பட்டறைக் கடையருகே வந்தான் அப்துல். அன்று பாட்டியின் கையில் பால் கொட்டியது அவன் நினைவுக்கு வந்தது. அவன் பாட்டிக்காக ஓர் இரும்புக் கிடுக்கியை வாங்கினான். பாட்டி பண்டிகைக்காக அவனுக்குக் கொடுத்த அன்புப் பரிசினால் அவன் மனம் நிறைந்திருந்தது. அப்போது அல்லாவின் தொழுகைக்காக அழைப்பு விடுத்தார்கள். மசூதியின் மேலிருந்து. அனைவரும் விரைந்து சென்றனர். அப்துலும் தொழுகையில் கலந்து கொண்டான். அவன் தன் வீடு திரும்பியதும் பாட்டி அவனை அன்புடன் உணவு அருந்த அழைத்தாள். அப்போது அப்துல் பாட்டியிடம் தான் வாங்கியிருந்த பரிசை மறைத்து வைத்துக் கொண்டு, ''பாட்டி! நான் உனக்காக என்ன வாங்கி வந்திருக்கிறேன் என்று சொல், பார்க்கலாம்'' என்றான். பாட்டி பட்சணம், பட்டாசு, சொக்காய் என்று ஏதேதோ சொன்னாள். அப்துல் பாட்டியிடம் தான் வாங்கி வந்திருந்த இரும்புக் கிடுக்கியைக் காண்பித்தான்.

அந்த உபயோகமான பொருளைக் கண்டதும் பாட்டி அப்துலை வாரி அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.



(சென்ற இதழ் தொடர்ச்சி)

கிருமிகளோடு போராடியவர்

கிருஷ்ணவேணி

உணவுப் பொருள்களைச் சூடாக்குவதினால் அதிலுள்ள கெட்ட பாக்டீரியாக்களைக் கொன்று பொருள்களைக் காப்பாற்ற முடியும் என்பதை ஒயின்களைச் சூடாக்கிக் கெடாமல் பாதுகாத்ததின் மூலம் உறுதிப்படுத்தினார் பாஸ்சர். இதற்கு **'பாஸ்சுரீசேஷன்'** என்று பாஸ்சரின் பெயரையே வைத்துவிட்டார்கள். பாலைக் காய்ச்சிக் குடிப்பதும் அதிலுள்ள கெட்ட பாக்டீரியாக்களை ஒழிப்பதற்குத்தான். இந்த முறையினால் மனித இனம் எத்தகைய ஆரோக்கிய வாழ்வை அடைந்தது என்பதை இன்று நாம் பார்க்கிறோம். இதற்கு நாம் பாஸ்சருக்கும் அவரது ஆராய்ச்சிக்கும் நன்றி செலுத்த வேண்டும்.

பட்டு உற்பத்திக்கும், ஒயின் தொழிலுக்கும் மகத்தான உதவி செய்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திய பாஸ்சர் தொடர்ந்து பல்வேறு நோய்களிலிருந்து மனிதக் குலத்தைக் காப்பதில் தம் நேரத்தைச் செலவிடலானார். உணவுப் பொருள்கள் கெடுவதற்கும் பட்டுப் புழுக்களுக்கு வந்த கொள்ளை நோய்க்கும் காரணமான கிருமிகளை — பாக்டீரியாக்கள் — அழித்ததினால் அவற்றைக் காப்பாற்ற முடிந்ததுபோல மனிதர்களுக்கு வரும் வியாதிகளைக் குணப்படுத்தவும் ஏன் இதே முறையைப் பயன்படுத்தக் கூடாது என்று சிந்திக்கலானார் பாஸ்சர்.

இந்தத் தம் முடிவை முதலில் அறுவைச் சிகிச்சையில் பயன்படுத்த நிச்சயித்தார். ஆபரேஷன் செய்த நோயாளிகள் அந்த அறுவைக் காயங்கள் காயாததினால் ஏராளமாக இறந்து கொண்டிருந்தார்கள்.

மருத்துவ அகாதமி அங்கத்தினர்கள் கூடி இருந்த கூட்டத்தில் பாஸ்சர், ''அறுவைக்காக வெட்டப்பட்ட காயங்கள் லட்சக்கணக்கான கிருமிகள் வந்து தங்குமிடமாக இருக்கின்றன. காற்றிலே, உங்கள் கைகளிலே, வெட்டுவதற்கும் அறுப்பதற்கும் பயன்படுத்தும் ஆயுதங்களிலே, நீங்கள் கட்டுப்போடும் பாண்டேஜ் துணிகளிலே பல லட்சம் கிருமிகள் இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றன. ஆகவே அவைகளை ஒழித்தால்தான் மரணத்தின் எண்ணிக்கையையும் குறைக்க முடியும்'' என்று விளக்கினார். ஆனால் பிரெஞ்சு அகாதமியின் உறுப்பினர்கள் பாஸ்சரின் விளக்கங்களைக் கேட்டுத் தங்கள் தாடிகளுக்குள்ளாக நகைத்தபடியே தலையை ஆட்டிவிட்டுப் போனார்கள். தங்கள் நோயாளிகளுக்குப் பழைமையான முறைகளிலேயே சிகிச்சை செய்து கொன்று கொண்டிருந்தார்கள்.

ஆனாலும் இளந் தலைமுறையினர் பாஸ்சரின் யோசனையை ஏற்றுக் கொஞ்சங் கொஞ்சமாக ஸ்டெரிலிசேஷனை (கிருமிநாசனம்) மருத்துவத்தில் புகுத்தி மகத்தான முன்னேற்றத்தைக் கண்டார்கள். 'மகப்பேறு மருத்துவ மனைகள் மரணம் நுழைய முடியாத கோட்டைகளாக மாறின' என்று பிற்காலத்து விஞ்ஞானிகள் எழுதினார்கள்.

உயிரைக் காக்கும் போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டுதான் இருந்தார் பாஸ்சர். மனிதர்களுக்கு வரும் சில கொடிய நோய்களைக் குணப்படுத்த வீர்யம் குறைந்த அந்த நோய்க் கிருமிகளையே அவனது உடலில் (இன்னாகுலேட்) செலுத்தினால் என்ன என்று ஆராயலானார். கொடிய கிருமிகளிலிருந்து 'வாக்சின்' தயாரித்து ஏராளமான உயிர்களைக் காப்பாற்றும் முறைக்கு வித்திட்டவர் பாஸ்சர்தான். ஆடுமாடுகளைக் கொள்ளை கொண்டு போயிற்று அந்த்ராக்ஸ் என்ற நோய். மண்ணீரலைப் பாதிக்கும் இந்நோயினால் பிரான்சின் கால்நடைச் செல்வமே

அழிந்து விடுமோ என்ற ஐயம் ஏற்பட்ட நிலையில் தடுப்பு ஊசி போடும் முறையில் அந்தக் கொள்ளை நோய்க் கிருமிகளையே கால்நடைகளின் உடலில் புகுத்தி வெற்றி காணலாம் என்றார் பாஸ்சர். கோழிகளுக்கு வந்த காலரா நோயையும் இதே முறையைக் கையாண்டு குணம் காண முடியும் என்றார். ஆனால் இதில் வெற்றி அடைய அவருடைய சக பாடிகள் அத்தனை சுலபமாக விட்டுவிடவில்லை. வழக்கம் போல் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார்கள். 'வியாதியைப் போக்க வியாதிக் கிருமியையே யாராவது உள்ளே செலுத்துவார்களா?' என்று வாதாடினார்கள்.

கொள்ளை நோயை ஊசி போடுவதன் மூலம் தடுத்துவிட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினார் பாஸ்சர். ஐம்பது ஆடுகளைத் தேர்ந்தெடுத்து அவற்றில் இருபத்தைந்துக்குத் தாம் தயாரித்த சீரத்தை (நோய்த்தடுப்புப் பால்) இனாகுலேட் செய்தார். இரண்டு வாரங்கள் கழித்து ஐம்பது ஆடுகளின் உடலிலும் வீர்யம் மிக்க ஆந்தராக்ஸ் நோய்க் கிருமிகளையே செலுத்தினார். ஊசி போடப்பட்ட ஆடுகள் பிழைத்துக் கொண்டன. இதே மாதிரி கோழிகளுக்கு வந்த கொள்ளை நோயையும் ஊசி போட்டுக் காட்டி நிரூபித்தார். அதன் பிறகே பாஸ்சரின் முறையை ஏற்றுக் கொண்டார்கள்.

பாஸ்சரின் வாழ்க்கையிலேயே சிகரமாக அமைந்தது வெறிநாய்க் கடிக்கு அவர் வாக்ஸின் தயாரித்து அதை மனிதர்களுக்கும் கொடுத்துக் குணமாக்கலாம் என்று நிரூபித்துக் காட்டியதுதான்.

வெறி நாயின் வாயிலிருந்து வழியும் கொடிய விஷமுள்ள நீரை எடுத்து ஆரோக்கியமான முயல்களின் உடலில் இனாகுலேட் செய்து ஆராய்ச்சி செய்யலானார். ஹைட்ரோஃபோபியா என்ற கொடிய நோய்க்குக் குணம் காணும் முயற்சி இது. சிலவேளைகளில் வெறி நாய்களை நேரடியாகவே முயல்களைக் கடிக்கும்படி செய்து அதனால் முயலின் உடலில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்து வந்தார். ஒரு சமயம் பெரிய 'புல்டாக்' (வெறிகொண்டது) வாயெல்லாம் நுரை தள்ளி நோயின் வேதனையினால் உக்கிரமாக இருந்தது. ஆனாலும் அதனிடம் தள்ளப்பட்ட முயலை அது பிடிவாதமாகக் கடிக்க மறுத்தது. அந்த வெறி நாயின் நோய்க் கிருமியை எப்படியும் எடுத்து ஆராய விரும்பிய பாஸ்சர் துணிகரமான ஒரு காரியத்தைச் செய்ய முற்பட்டார். நினைத்தாலே நெஞ்சம் நடுங்கும் செயல் அது.

ஒரு மேஜையோடு அந்த வெறி நாயைக் கட்டினார்கள். ஒரு கண்ணாடிக் குழாயைத் தன் வாயில் இடுக்கியபடி வெறி நாயின் வாயருகே பாஸ்சர் குனிந்தார். மரணத்தோடு விளையாடுகிறோம் என்பது தெரிந்தும் அக்கொடிய வெறி நாயின் விஷமுள்ள உமிழ்நீரைத் துளித் துளியாக உறிஞ்சிக் கண்ணாடிக் குழாயில் ஏற்றிக்கொண்டார்.

நாய்களுக்கு ஏற்படும் 'ராபிஸ்' என்ற இக் கொடிய நோயைக் குணப்படுத்தும் மார்க்கத்தை ஆராய்ந்து வெற்றி கண்டு விட்டார் பாஸ்சர். நாய்களுக்கு வரும் இந்நோயின் அம்மைப்பாலை (வாக்சின்) வேறு மிருகங்களுக்கு இனாகுலேட் (தடுப்பு ஊசி) செய்து வெற்றி கண்டிருந்தார். ஆனால்



இந்த வாக்சினை மனிதர்களுக்குப் போட்டுப் பார்க்கவில்லை.

அதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. 1885ம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு நாள் ஜோஸப் மீஸர் என்ற ஒன்பது வயதுப் பையன் ஒருவன் காலை இளம் வெய்யிலில் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தான். அருகே ஒரு வெறி நாய் இருப்பதை அவன் கவனிக்கவில்லை. அந்த வெறி நாய் அச்சிறுவனைப் பதினாலு இடங்களில் கடித்துக் குதறி விட்டது. ஒரு தடவை கடித்தாலே உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படும் என்றால் பதினாலு தடவை கடிபட்ட பையன் பிழைப்பானா?

பையனின் தாயாரிடம் ஊரார் மகனை இழக்கப் போகும் அவளுக்கு ஆறுதல் கூறினார்கள். அதைத் தவிர வேறு வழியே கிடையாது அந்தக் காலத்தில். வெறி நாய் கடியுண்டவனிடம் ஹைட்ரோஃபோபியா என்னும் நோய் பரவி முதலில் மூளையையும் முதுகெலும்பையும் தாக்கும். பைத்தியம் பிடித்தவனாகி, நாயைப் போலவே குரைத்து வாயில் நுரை தள்ளச் செத்துப் போவான். இதற்கு அதுவரை எவ்வித மருந்துமே கண்டவர்கள் இல்லை.

தன் மகனுக்கு இந்தக் கதியா என்று திக்பிரமை பிடித்துப் போன தாயாரை ஒரு டாக்டர் ''உன் மகனை பாஸ்சரிடம் அழைத்துப் போ. அவர் இதற்கு ஏதோ ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்'' என்றார். அந்தத் தாயும் வெறி நாய் கடியுண்ட மகனைத் தூக்கிக் கொண்டு பாஸ்சரிடம் வந்தாள்.

நிலைமையை உணர்ந்த பாஸ்சர் தயங்கினார். இதுவரை அவர் அந்த நோய்க் கிருமிகளை மனித உடலுக்குள் செலுத்தி ஆராய்ந்ததில்லை. என்ன ஆகுமோ? குணப்படுத்துவதற்குப் பதில் கொடிய விளைவுகள் ஏற்படுமானால்?

''எப்படியும் அந்தப் பையன் இறக்கத் தான் போகிறான். ஆகவே நீங்கள் இனுகுலேட் செய்ய யோசிக்க வேண்டாம்'' என்று நம்பிக்கை அளித்தனர் டாக்டர்கள். பாஸ்சரும் துணிந்தார். பையனின் ரத்த நாளங்களில் வீர்யமற்ற ராபிஸ் நோய்ப் பாலை ஊசி மூலம் செலுத்தினார். இப்படியே பதினொன்று தினங்கள் தொடர்ந்து ஊசி மூலம் நோய்ப் பாலை உள்ளுக்குச் செலுத்தினார். பாஸ்சருக்கு உறக்கமில்லாத இரவுகள் — பையனின் நிலை என்ன ஆகுமோ என்று. ஆனால் சிறுவனோ அமைதியாக உறங்கினான். காயங்கள் ஆறிக் கொண்டிருந்தன. உலகமே வியக்கும் வண்ணம் வெறி நாய் கடியுண்ட மனிதன் பூரண குணமடைந்துவிட்டான்! பாஸ்சர் ஹைட்ரோஃபோபியா நோயையும் வெற்றி கண்டு விட்டார்.

எதிர்ப்பும், நிராகரிப்பும், அவமதிப்பும் மெள்ள மெள்ளத் தோல்வியடைந்து விலகி ஓடி பாஸ்சரின் புகழ் பெருகியது. பட்டங்கள் வந்து குவிந்தன. அகாதமிகளின் தலைமைப் பதவிகள் காத்திருந்தன. டிப்ளமாக்கள், தங்கப் பதக்கங்கள், பாராட்டுக்கள், விழாக்கள் இப்படி எத்தனை எத்தனையோ. ஆனாலும் பாஸ்சர் இதனாலெல்லாம் மாறிவிடவில்லை. உண்மையைத் தேடி ஓடும் அதே பொறுமைசாலியாக எளியவராகத்தான் வாழ்ந்தார். ஆரம்ப நாட்களில் வெறுப்பும், அவமதிப்பும் எப்படி இருந்தனவோ அதே அளவுக்கு இப்போது புகழ்ச்சியும் பாராட்டுக்களும் இருந்தன. ''என் ஜனங்கள் என்னை இப்படிப் புகழ்கிறார்களென்று எனக்குப் புரியவேயில்லை'' என்றார் பாஸ்சர்.

லண்டனில் நடைபெற்ற சர்வதேச மருத்துவ காங்கிரஸுக்குப் பிரான்ஸ் தேசத்தின் பிரதிநிதியாகச் சென்ற லூயி பாஸ்சர் ஸெயின்ட் ஜேம்ஸ் அரங்கத்தினுள் நுழைந்த போது கடல் அலையென அங்கு கூடியிருந்த மக்கள் அவரை வரவேற்கக் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். அந்த மாபெரும் கைத்தட்டல் தமக்காகத்தான் என்பதை உணராத பாஸ்சர் தம் அருகே வந்தவரிடம் ''வேல்ஸ் இளவரசர் வருகிறார் போலிருக்கிறது. அது தான் இத்தனை ஆரவாரமான கைத்தட்டல். இன்னும் கொஞ்சம் முன்னதாகவே வந்திருந்தால் இந்தக் கோலாகலத்தில் நானும் கலந்து கொண்டிருப்பேன்'' என்றார். எத்தனை எளிமையானவர்? மனித குலத்தின் நல்வாழ்வுக்காக எத்தனையோ பெரிய காரியங்களைச் செய்த அவர் எதையுமே— ஏன், பிறரிடமிருந்து பாராட்டைக் கூட எதிர்பார்க்காத அளவுக்கு அத்தனை எளிமையானவர்.

பாஸ்சரின் பெருமையை மக்களும் உலகமும் உணர்ந்து கொண்டது. நன்கொடைகள் வந்து குவிந்தன. பாஸ்சர் கழகம் நிறுவப்பட்டது. தம் வாழ்நாள் முழுதும் அதில் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டார் லூயி பாஸ்சர். தொற்று நோய்களை ஒழிக்க ஒரு வைத்தியசாலையும் நிறுவினார் பாஸ்சர்.

தமது எழுபத்து மூன்றாவது வயதில் லூயி பாஸ்சர் அமரரானார். கிருமிகளை இனம் கண்டு ஒழிப்பதற்கான வழிவகைகளை உருவாக்கியதில் முன்னோடியாக விளங்கியவர் லூயி பாஸ்சர்.

மூளைக்கு வேலை

தந்திரக் கணக்குகள்

உங்கள் நண்பனை ஒரு பேப்பரும், பென்சிலும் எடுத்துக் கொண்டு உங்களுக்குச் சற்றுத் தூரத்தில் உட்காரச் சொல்லுங்கள். அவனிடம் உள்ள பேப்பரில் ஒரு சதுரம் போட்டுக் கொள்ளச் சொல்லுங்கள். சதுரத்தின் நான்கு பக்கங்களிலும் நான்கு நம்பரும் நடுவில் ஒரு நம்பரும் போட்டுக் கொள்ளச் சொல்லுங்கள். இதை நீங்கள் பார்க்கக் கூடாது. பிறகு படுக்கை முறையில் (இடமிருந்து வலமாக) உள்ள மூன்று எண்களையும் கூட்டி விடையைச் சொல்லச் சொல்லுங்கள். அடுத்து நேர் வரிசையில் (மேலிருந்து கீழ்) எண்களைக் கூட்டி விடையைக் கூறச் சொல்லுங்கள். அடுத்து நான்கு பக்கங்களிலுள்ள எண்களை மட்டும் கூட்டிச் சொல்லச் சொல்லுங்கள். இப்போது நீங்கள் கட்டத்தின் நடுவில் உள்ள எண் என்ன என்பதை 'டக்' என்று சொல்லிவிடலாம்.

இது எப்படி? இதோ உங்களுக்கு மட்டும் ரகசியம்!

படுக்கை முறையில் கூட்டிய விடை, நேர்முறையில் கூட்டிய விடை இரண்டையும் கூட்டி, நான்கு பக்க எண்களைக் கூட்டிய விடையை அதில் கழித்து, மீதி வரும் எண்ணை இரண்டால் வகுத்தால் வரும் ஈவுதான் நடுவில் உள்ள எண்.

— எஸ். குமார்

இராமு, சோமு, சாமு, ரவி நால்வரும் நண்பர்கள். ஒரு நாள் ரவி சில கோலிக் குண்டுகளை எடுத்துக் கொண்டு இராமு வீட்டுக்குச் சென்றான். தான் கொண்டு வந்த கோலிக் குண்டுகளைப் போன்று இன்னொரு மடங்கு கோலிகளை அவனிடம் பெற்றுக் கொண்டான்.



பிறகு சில கோலிக் குண்டுகளை அவனிடம் (இராமுவிடம்) கொடுத்துவிட்டு மீதி கோலிக் குண்டுகளுடன் சோமு வீட்டுக்குச் சென்றான். சோமுவிடமும் தான் கொண்டுவந்த கோலிக் குண்டுகளைப் போன்று ஒரு மடங்கு வாங்கிக் கொண்டான். பிறகு இராமுவிடம் எவ்வளவு கோலிக் குண்டுகளைக் கொடுத்தானோ, அவ்வளவுகோலிக் குண்டுகளைச் சோமுவிடமும் தந்தான். மீதி கோலிக் குண்டுகளை எடுத்துக் கொண்டு சாமுவிடம் சென்றான். ரவி கையில் தற்போது இருக்கும் கோலிக் குண்டுகளின் எண்ணிக்கையும், சாமுவிடமிருக்கும் கோலிக் குண்டுகளின் எண்ணிக்கையும் சமமாக இருந்தது. ஆகவே ரவி தன் கோலிக் குண்டுகளையும் சாமுவினிடத்திலேயே கொடுத்து விட்டான். ரவியிடம் இப்போது ஒரு கோலிக் குண்டு கூட இல்லை. சோமு, ராமு, சாமு மூவரிடமும் உள்ள கோலிக் குண்டுகளின் எண்ணிக்கையோ சரி சமமாக இருந்தது எனில், ரவி எவ்வளவு கோலிக் குண்டுகள் கொண்டு வந்தான்? ஒவ்வொருவரிடமும் கொடுத்தது எவ்வளவு?

ஒருநாள் முரளி பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குச் செல்லும்போது மாங்காய் விற்றுக் கொண்டிருக்கும் ஒரு கிழவியைக் கண்டான். அவளிடம் சென்று எத்தனை மாங்காய் வைத்துள்ளாய் என வினவினான். அதற்கு அவள் நேரடியாகப் பதில் கூறாமல், கீழ்க் கண்டவாறு கூறினாள்.



நான் வைத்திருக்கும் மாங்காயை ஆறு ஆறாகப் பிரித்தால் ஐந்து மாங்காய் மீதமிருக்கும். ஐந்து ஐந்தாகப் பிரித்தால் நான்கு மீதமிருக்கும். நான்கு நான்காகப் பிரித்தால் மூன்று மீதமிருக்கும். மூன்று மூன்றாகப் பிரித்தால் இரண்டு மீதமிருக்கும். இரண்டு இரண்டாகப் பிரித்தால் ஒன்று மீதம் இருக்கும் எனக் கூறினாள்.

முரளி கெட்டிக்காரன். எனவே அவளிடம் எவ்வளவு மாங்காய்கள் உள்ளன எனக் கண்டு பிடித்து விட்டான். எங்கே நீங்களும் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

— ந. பத்மநாபன்

ஊகிக்க முடியாதவர்களுக்கு விடை:


(1) ரவி கொண்டுவந்த கோலிக் குண்டுகள் 7. இராமு, சோமு, சாமு ஒவ்வொருவரிடமும் கொடுத்தது 8 கோலிக் குண்டுகள்.

(2) கிழவியிடம் உள்ள மாங்காய்களின் எண்ணிக்கை 119.

$119 \div 6 = 19\text{-}5$ $119 \div 5 = 23\text{-}4$

$119 \div 4 = 29\text{-}3$ $119 \div 3 = 39\text{-}2$

$119 \div 2 = 59\text{-}1$









"டேய், முனியா! உனக்கு மூளையே இல்லே. அந்த வாணத்தை அப்படியா கொளுத்துவது? டாக்டரிடம் போய் மூளைக்கு மருந்து வாங்கிக்கோ."

"எனக்குன்னு கேட்டா அவர் தரமாட்டாருங்க. உங்களுக்குன்னு கேட்டு வாங்கிக்கறேன்."



"ஏண்டா இப்படிக் குழந்தையை...?"

"தாடித் தாத்தா ஊரிலிருந்து வரப்போறாரே அவர் குழந்தையைக் கொஞ்சுவாரில்லையா? அதற்காகத்தான் குழந்தைக்குப் பழக்கம் பண்ணறேன்."


"அட சனியனே! அவர் தாடியை எடுத்துட்டாரடா!"



"பகுத்தறிவுப் போட்டியிலே எல்லா விடைகளும் சரியாக வந்திருக்காம். தீபாவளி வெகுமதியோட பரிசு கிடைக்கப்போறதுன்னு உங்கப்பா ஆனந்தப்படுறார்; அவர் கொடுத்த கூப்பனை நீ 'போஸ்ட்' செய்ய மறந்து போய்விட்டாள் என்பதை அவரிடம் போய் இப்போதே சொல்லிவிடு. அப்புறமாகச் சொன்னால் ஆபத்து....."

சிரிக்கச் சிரிக்க!!

-சாமா-



மின்சார ரயில்

மின்சார ரயில் இன்ஜின் நீராவியினால் இயங்கும் ரயில் இன்ஜினைவிட அதிக வேகமாகவும், அதிக பாரத்தையும் இழுக்கும் சக்தியுடையது. நீராவியினால் இயங்கும் ரயில் இன்ஜின் சுமார் 800 டன்களை இழுக்கும். ஆனால் மின்சார ரயில் இன்ஜின் 1700 டன்களை இழுத்துக் கொண்டு செல்லும்.

இந்த மின்சார ரயில் இன்ஜினை முறைப்படி இயக்கி விட்டால் மட்டும் ஓடாது. வண்டியை ஓட்டும் டிரைவர் கைப்பிடியின் 'டிப்'பில் ஓர் அமுக்கும் சாதனம் (பிரஸ்ஸிங்-பட்டன்) இருக்கிறது. அதை அமுக்கியபடியே இருந்தால்தான் வண்டி ஓடும். சற்றுத் தளர்ந்தாலும் மின்சார ரயில் இன்ஜின் ஓடுவது நின்றுவிடும். இதனால் டிரைவர் வண்டியை ஓட்டும்பொழுது தன் கவனத்தை வேறு எங்கும் செலுத்த முடியாது. தவிர டிரைவருக்கு திடீரென்று உடல் நலக் கோளாறு ஏற்பட்டு ஏதாவது நேர்ந்தால் பட்டனில் இருக்கும் அவர் கை நழுவ நேர்கையில் வண்டி தானாக நின்றுவிடும்.

பச்சை, சிவப்புக் கொடி



ஸ்டேஷன்மாஸ்டர், கார்டு முதலியவர்கள் வைத்திருக்கும் பச்சை, சிவப்பு நிறக் கொடிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்தக் கொடிகள் ஃப்ளானல் (Flanel) என்னும் கம்பளித் துணியினால் ஆனது. ரயில் வண்டி ஓட ஆரம்பித்த காலத்திலிருந்து பச்சை, சிவப்புக் கொடிகளைக் கம்பளித் துணியினால்தான் வைத்திருக்கிறார்கள். காரணம்: கைத்தறி, மில் நூலினால் ஆன துணியிலிருக்கும் பச்சை, சிவப்பு வண்ணங்கள் நாளடைவில் வெளுத்துவிடும். (நிறம் மாறிவிடும்). உண்மையான பச்சை, சிவப்பு நிறம் மாறாமலிருக்கவே ரயில்வே நிர்வாகத்தினர் ஃப்ளானல் துணியில் கொடிகளைத் தயார் செய்திருக்கிறார்கள். கம்பளியினால் ஆன இந்தக் கொடிகள் எக்காலத்திலும் நிறம் மாறாது. இந்தக் கொடி சுமார் 18 அங்குல நீள அகலம் இருக்கும்.

ரயில் கார்

சாலையில் ஓடும் கார்களைப் பார்த்திருக்கும் நீங்கள் ரயில் தண்டவாளத்தில் ஓடும் 'ரயில் கார்'களைப் பார்த்திருக்கிறீர்களா? உங்களில் சிலர்தான் பார்த்திருக்க முடியும்.

நம் நாட்டில் ஸ்டீம் இன்ஜின் ரயில், (நீராவியினால் இயங்குவது) மின்சார ரயில், டீஸல் ரயில் என்று இருப்பதைப் போல் ரயில் காரும் உண்டு. டீஸல் எண்ணெயில் இயங்கும் இந்த ரயில்கார் திருச்சியிலிருந்து கும்பகோணம், திருவாரூர், காரைக்குடி ஆகிய ஊர்களுக்குச் சென்று வருகிறது. அதேபோல் பெங்களூர் நகரத்திலிருந்து மைசூர் வரைக்கும் ரயில்கார் செல்கிறது.

இந்த ரயில் காரை பஸ்ஸை இயக்குவதுபோல் இயக்குகிறார்கள். பஸ்ஸில் 'ஏர்-பிரேக்' இருப்பது போல் இதற்கும் 'ஏர்-பிரேக்' உண்டு. தவிர 'ஹேண்ட் பிரேக்'கும் தனியாக உண்டு.

ரயில்வே டிக்கெட்



நீங்கள் ரயிலில் பிரயாணம் செய்வதற்குமுன் ரயில் டிக்கெட்டை ரயில் நிலையப் பிளாட்பாரத்துக்குள் நுழைவதற்கான வாசலிலிருக்கும் டிக்கெட் கலெக்டரிடம் காண்பிக்கும் பொழுது அந்த டிக்கெட்டை வெட்டும் குறட்டினால் டிக்கெட்டின் கீழ்ப் பாகத்தில் வெட்டிக் கொடுக்கிறார் இல்லையா? அப்படி வெட்டிக் கொடுப்பதை அட்மிஷன் லிப்பர் (Admission lipper) என்று சொல்வார்கள். இந்த வெட்டுவாய் 'A' எழுத்தைப் போலிருக்கும். ரயில் வண்டியில் ஏறிப் பயணம் செய்து உங்கள் ஊர் வந்தவுடன் ரயிலை விட்டு இறங்கி ஸ்டேஷனை விட்டு வெளியே வரும்பொழுது அந்த ரயில் நிலைய வாசலில் இருக்கும் டிக்கெட் கலெக்டரிடம் உங்களுடைய டிக்கெட்டைக் கொடுத்து விட்டு வெளியே வருகிறீர்கள். அத்துடன் உங்கள் வேலை முடிந்தது. அவர் அந்த டிக்கெட்டுகளின் மேல் புறத்தில் வெட்டும் குறட்டினால் வெட்டுவார். இந்த வெட்டுவாய் 'M' போலிருக்கும். இதற்கு 'எம்' டைப் லிப்பர் என்று பெயர்.

— பொன்மலை பரிமளம்

ன்ன விஷமம் பண்ணலாம்?



பழம் தின்னலாமா?



பதவிசாகப் படிக்கலாமா?



பந்தடிக்கலாமா?



பந்து பிடிக்கலாமா?



பம்பு அடிக்கலாமா?



க்கெட்டில் புடிக்கக் குளிக்கவா?




ஒன்னுலேருந்து...



அஞ்சுவரைக்கும் எண்ணறதுக்
குள்ளே சொல்லுங்கோ !



புகைப்படங்கள் : எம். கே. ராமமூர்த்தி



முட்டாள் அரசனும் மூன்று பெண்களும்

— ஜானுதுரை

வெகு காலத்துக்கு முன்னால் விக்ரமபுரி என்னும் நாட்டை விக்கிரமன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் எந்த ஒரு செயலையும் சிந்திக்காமல் செயல் படுவதில் வல்லவன். அவனுடைய அச்செயல்களால் பல துன்பங்களை அடைவானே தவிர நன்மை பெற்றதே யில்லை. அதனால் மற்ற மன்னர்கள் அவனை முட்டாள் அரசனெனக் கேலி செய்து வந்தனர்.

இத்தகைய மன்னனிடம் ஓர் அழகிய பட்டத்து யானை இருந்தது. மன்னன் அதனை மிகவும் நேசித்து வந்தான். ஒரு நாள் அந்த யானையைப் பாகன் ஊருக்கு வெளியே உள்ள விக்ராந்தி எனும் நதியில் குளிப்பாட்டி அழைத்து வந்து கொண்டிருந்தான். வரும் வழியில் அவனது நண்பன் வரவே அவனுடன் பேசிக் கொண்டே வந்தவன் யானையை விட்டு விட்டு வெகு தொலைவுக்குப் போய்விட்டான்.

யானை வந்து கொண்டிருந்த வழியில் ஒரு பருத்தித் தோட்டம் இருந்தது. அதில் மூன்று பெண்கள் பருத்திக் காய்களைப் பறித்துக் கொண்டிருந்தனர். தனித்து வரும் யானையைக் கண்ட இளையவள் மூத்தவளிடம் ''அக்கா! அக்கா! அதோ அந்தச் சுண்டெலியைப் பார். இரவு சமையலுக்குத் தேவைப்படும். பிடித்து மடியில் போட்டுக்கொள்'' என்றாள். உடனே மூத்தவள் இடது கையால் யானையைத் தூக்கி மடியில் போட்டுக் கொள்ள யானை சுண்டெலியாகி விட்டது.

வெகு தொலைவுக்குச் சென்ற பின் தான் யானைப் பாகனுக்கு யானையின் நினைவு வந்தது. உடனே திரும்பி ஓடி வந்தான். சுற்று முற்றும் யானையைத் தேடினான். யானை என்ன சிறிய மிருகமா, புல்லில் மறைந்து கொள்ள?

மன்னனிடம் போய் முறையிட்டான். மன்னனுக்குக் கோபம் வந்து விட்டது. பட்டத்து யானையை யார் திருடியிருந்தாலும் உடனே அவர்களைக் கொலை செய்யும்படி உத்தரவிட்டான். யானை கிடைக்கவில்லை.

மன்னன் விசாரித்தான். யானைப் பாகனும் 'பருத்தித் தோட்டத்தில், மூன்று பெண்களைத் தவிர வழியில் யாருமே கிடையாது' என்றான். உடனே மூன்று பெண்களும் மன்னனிடம் அழைத்து வரப்பட்டனர். அரசன் அப்



வயதைக் கண்டுபிடியுங்கள்

நண்பரின் பிறந்த மாதத்தின் எண்ணை (உதாரணமாக ஜுலை, அது ஏழாவது மாதம்) மனத்தில் கொள்ளச் சொல்லுங்கள். பின்னர் அதை இரண்டால் பெருக்கி, 5-ஐக் கூட்டச் சொல்லுங்கள். வந்த விடையை மறுபடியும் 50-ஆல் பெருக்கி, அதிலிருந்து 365-ஐக் கழிக்கச் சொல்லுங்கள். இப்பொழுது வந்த விடையோடு அவரின் வயதை (வருடத்தில்) கூட்டச் சொல்லுங்கள். இப்பொழுது வரும் விடையை உங்களிடம் கூறச் சொல்லுங்கள். உடனே நீங்கள் அவரின் தற்போதைய வயதையும்அவரின் பிறந்த மாதத்தையும் கூறி விடுவீர்கள்.

எப்படி?'

கூறும் முறை: அவர் கூறிய விடையோடு 115-ஐக் கூட்டுங்கள். இப்பொழுது வரும் எண்ணின் கடைசி இரண்டு ஸ்தானங்கள் அவரின் வயதையும், முதல் ஸ்தானம் அவரின் பிறந்த மாதத்தையும் குறிக்கும்.

உதாரணம்:

பிறந்த மாதம் ஜுலை 7

2-ஆல் பெருக்கு $7 \times 2 = 14$



அந்த மூன்று பெண்களும் சோழிகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

அரசனுக்குக் கடுங் கோபம் ஏற்பட்டது. இந்தப் பெண்களை உயிருடன் விடக் கூடாது என நினைத்தான். உடனே பெரிய பள்ளம் தோண்டிக் கட்டைகளை அடுக்கித் தீ மூட்டும்படி ஏவலாட்களுக்கு உத்தர விட்டான். அதன்படி அவர்கள் செய்யத் தொடங்கினர்.

பெண்கள் மூவரும் தங்கள் நிலையை உணர்ந்தனர். முட்டாள் அரசனின் முடிவில்லாக் கோபத்தைக் கண்டு நகைத்தாள் இளையவள். உடனே அவள் உண்ட கடல் நீர் வெளிவரத் தொடங்கியது. நாடு நகரம் வீடு வாசல் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கத் தொடங்கியது.

முட்டாள் அரசனைத் திருத்தி அவனைப் புத்திசாலியாக மாற்றி விட்டு வருவதாகத் தங்கள் கணவர்களிடம் சபதம் செய்துவிட்டு வந்த அந்த மூன்று தேவதைகளும் தங்களுடைய தோல்வியைக் கண்டு தங்களுக்குள்ளேயே நகைத்தவாறு விண்ணுலகு நோக்கிப் பயணமானார்கள்.

பெண்களிடம், ''யானையைக் கண்டீர்களா?'' என்று கேட்டான். ''யானை என்றால் என்ன?'' என்று அம்மூவரும் மன்னனைக் கேட்கவே மன்னன் திகைத்து விட்டான். பின்னர் ஒரு வழியாக யானையின் உருவத்தைப் படம் வரைந்து காட்டவே, ''ப்பூ இந்தச் சுண்டெலிக்கா இத்தனை ஆர்ப்பாட்டம்?'' எனக் கூறி மூத்தவள் மடியிலிருந்த சுண்டெலியை எடுத்துக் கீழே விட்டாள். அது யானையாக மாறியது. மன்னனும் மற்றவர்களும் திடுக்கிட்டனர்.

அரசன் அந்த மூன்று பெண்களையும் இப்படியே விட்டு விட்டால் நாட்டுக்கே ஆபத்து எனக் கருதி ஒரு பாவமும் அறியாத அந்த மூன்று பெண்களையும் கடலில் மூழ்கடிக்கும்படி தன் வேலையாட்களுக்கு உத்தரவிட்டான். அதன்படியே அந்த வேலைக்காரர்கள் பெரிய பெரிய கற்களைக் கட்டி அம்மூன்று பெண்களையும் கடலில் உருட்டி விட்டனர்.

விடியற்காலையில் செம்படவர்கள் அரசனிடம் ஓடி வந்தனர். ''அரசே! நாங்கள் மீன் பிடிக்க இனி எங்கே போவோம்?'' எனக் கதறினார்கள். அரசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் பரிவாரங்கள் புடைசூழ அவன் கடற்கரைக்கு வந்தபோது அங்கு கடலைக் காணோம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடலைக் காணவே காணோம். பரந்து விரிந்து கிடந்த மணற் பரப்பில்



5-ஐக் கூட்டு	14 + 5 = 19
50-ஆல் பெருக்கு	19 × 50 = 950
365-ஐக் கழி	950 — 365 = 585
வயதைக் கூட்டு (18)	585 + 18 = 603

இப்பொழுது அவர் கூறிய விடை (603) இத்துடன் 115ஐ கூட்ட, 603 + 115 = 718 கடைசி இரு ஸ்தானங்கள்—18 வயது; முதல் ஸ்தானம் பிறந்த மாதம் ஜூலை 7.

—தம்பிதுரை

தெரியுமா?

826. மெட்ரோனோம் (Metronome) என்பது கணிதத்தின் ஒரு சூத்திரம். பாரிஸில் உள்ள பாதாள ரயில்வேயில் ஒரு ஸ்டேஷன், நேரத்தைக் குறிக்க ஒலிக்கும் ஒரு யந்திரம், ஒரு முக்கியமான நகரின் ஒரு பகுதி — இவைகளில் எது சரி?

827. டாரகான் (Tarragon) என்பது ஒரு மூலிகை., ஸ்பானியச் சிவப்பு ஒயின், ஒரு மீன், மெதுவாக நடக்கும் மனிதன் — இவைகளில் எது சரி?

828. க்ளா கோமா (Glaucoma) என்றால் நினைவிழந்து கிடக்கும் நிலையில் ஒரு வகை, சுண்ணாம்பும் அலுமினியமும் கலந்து ஒரு ஸிலிகேட், கண் விழியில் ஏற்படும் ஒரு நோய் இவைகளில் எது சரி?

829. ஜிங்கோய்ஸம் (Jingoism) என்றால் — போர்க் குணமுடைய ஒரு நாடக மேடைக் காட்சி, இசையின் ஒரு வகை ஒலி, நிச்சயமற்ற வேகமான அசைவு - இவைகளில் எது சரி?

830. சந்திரனின் ஆகர்ஷண சக்தியினால்தான் கடல்களில் அலைகள் ஏற்படுகின்றன. அது சரியா? தவறா?

831. ஐக்கிய அமெரிக்காவின் மேற்கு மாகாணங்களில் ஒன்று ஒரு தீவு. சுரங்கத் தொழில்தான் இங்கு முக்கியம். வேலை செய்வோரில் பாதிப் பேர் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இம்மாகாணத்தின் பெயர் என்ன? தலை நகர் எது?

832. கிரீஸ் நாட்டில் எங்கு சரித்திரப் பிரசித்தி பெற்ற இடிபாடுகள் காணப்படுகின்றன? அதன் பெயர் என்ன?

833. இங்கிலாந்தின் பார்லிமெண்டைத் தகர்த்தெறியத் திட்டமிடப்பட்ட வெடி மருந்துச் சதி எந்த ஆண்டில் என்று தெரியுமா?

834. மயில், பறவை இனங்களில் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தது என்று தெரியுமா?

835. இங்கிலாந்தின் முதுகெலும்பு என்று கூறப்படும் மலைப் பிரதேசத்தின் பெயர் தெரியுமா?

836. நிலக்கரித் தாரிலிருந்து செயற்கை க்வினைன் தயாரிக்கும்போது ஒரு சாயப் பொருளைக் கண்டு பிடித்தார் ஒருவர். அவர் பெயர் தெரியுமா?

837. மாதா கோயிலின் நடைபாதையில் அநேகமாக நடப்படும் மரம் எது?

838. காபூகி நடனத்தை எந்தத் தேசத்துக்குப் போனால் காணலாம்?

839. எகிப்து நாட்டின் கடைசி மன்னரின் பெயர் என்ன?

840. க்விக் சில்வர் என்ற பொருளுக்கு இன்னொரு பெயர் உண்டு. அது என்ன?

841. ஆப்பிரிக்காவின் மிக உயரமான மலைச் சிகரம் — அபுயா மீடா, ராஸ்தாஷான், கிளிமஞ்சாரோ இம் மூன்றில் எது?

842. மடகாஸ்கர் தீவு எந்தக் கடலில் இருக்கிறது?

843. லாக்கராஸ் என்று ஒரு விளையாட்டு. இதை முதன் முதலில் ஆடியவர்கள் யார் தெரியுமா?

844. ஹெய்லி ஸெலாஸி எந்த நாட்டின் மன்னர்?

845. பிரிட்டிஷ் மன்னர்களுக்கு ‘வேல்ஸ் இளவரசர்’ என்ற பட்டம் முதல் முதல் வழங்கப்பட்டது எந்த ஆண்டில்

846. இங்கிலாந்துக்கு முதன் முதலில் உருளைக் கிழங்கைக் கொண்டுவந்தவர் யார்?

847. ஹின்கெல் (Heinkel) என்று ஒருவகை விமானம். இதைத் தயாரிப்பது எந்த நாடு?


848. புராதன கிரேக்கக் கடவுளர்களின் உணவு — பால், தேன், ஒயின் அம்ரோஸியா — இவைகளில் எது?

849. ‘வால்கேம்’ என்றுஅழைக்கப்படும் ஒருவகை ஃபுட் பால் ஆட்டத்தை புகழ்பெற்ற ஆங்கிலேயப் பள்ளி ஒன்று ஆடுகிறது. அப்பள்ளியின் பெயர் என்ன?

850. கிறிஸ்தவர்களின் வேத நூலான பழைய ஏற்பாட்டில் கனவுகளுக்கு விளக்கம் கொடுக்கும் பாத்திரத்தின் பெயர் என்ன தெரியுமா?

தெரியுமே!

826. கடிகார விசைப்படி இயங்கும் பெண்டுலத்தோடு கூடிய ஒரு யந்திரம். நேரத்தைக் குறிக்கச் சரி செய்து வைக்கக் கூடியது. 827. நறுமணமுள்ள ஒரு மூலிகை. 828. விழியில் ஏற்படும் ஒருவகை நோய். 829. போர்க்குணம், யுத்தம் செய்ய வேண்டும் என்ற வேகமுடையோரின் போக்கு. 830. சரியே. 831 உடா (Utah) தலைநகர் ஸால்ட் லேக் ஸிட்டி. 832. ஏதென்ஸ் நகரில், அக்ரோபோலிஸ் என்று பெயர். 833. 1605ல். 834. பெஸண்ட் (Pheasant) குடும்பத்தை. 835. பென்னைன் செயின் என்பது. 836. அனிலைன் டை கண்டவர் சர் W. H. பெர்கின். 837. யூ (Yew) என்ற மரம். 838. ஜப்பானுக்கு. 839. பரூக் மன்னர். 840. மெர்க்குரி. 841. கிளிமஞ்சாரோ. 842. இந்துமகா சமுத்திரத்தில். 843. வடக்கு அமெரிக்காவில் வாழும் செவ்விந்தியர்கள். 844. எதியோப்பியா. 845. 1301ல் முதலாம் எட்வர்டின் மகனுக்கு. இவர்தான் முதல் வேல்ஸ் இளவரசர். 846. சர் வால்டர் ராலே. 847. ஜெர்மனி. 848. அம்ரோஸியா. 849. ஏடன் (Eton) 850. ஜோசப் (Joseph).



புதிய வேலைகளின் பொதுவான விளைவு பதட்ட நிலை....தலைவலி

சக்தி வாய்ந்த, நம்பகமான அனஸின் தடங்கலான தருணத்தில் உங்களுக்கு உதவுகிறது.

இன்று நீங்கள் ஒரு புது வேலை செயதாக வேண்டும். ஆனல் பல தடங்கல்கள். பதட்ட நிலை தோன்றுகிறது. தலைவலி உண்டாகிறது.

இங்நிலையில் அனஸின் சாப்பிடுங்கள். விரைவில் நிவாரணம் பெறுங்கள். அனஸின் மிகவும் சக்திவாய்ந்தது. ஏனெனில், உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி-நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனஸின். தலைவலி நீங்கியதும், இந்த நிலையை நீங்கள் நன்கு சமாளிக்க முடியும்.



இன்று பிற்பகலில் ஒரு முக்கியமான மீட்டிங். ஆனல் திடீரென்று உங்களுக்குக் கடும் தலைவலி.

தலைவலியிலிருந்து விரைவில் நிவாரணம் பெற, சக்திவாய்ந்த, நம்பகமான அனஸின் சாப்பிடுங்கள். அனஸின் தலைவலியை மட்டுமின்றி அதைத் தொடர்ந்துவரும் மனச்சோர்வையும் நீக்குகிறது. நீங்கள் மீண்டும் உற்சாகத்துடன் மீட்டிங்கில் கலந்துகொள்ள உதவுகிறது.



இன்று மேலதிகாரிக்கும் உங்களுக்கும் இடையில் பலத்த வாக்குவாதம். அதன் விளைவாக உங்களுக்குக் கடுமையான தலைவலி.

இத்தகைய சமயத்தில், சக்திவாய்ந்த நம்பிகமான அனஸின் உங்களுக்கு எப்போதும் உதவுகிறது. அனஸின் பதட்ட நிலையால் ஏற்படும் தலைவலியிலிருந்து விரைவில் நிவாரணம் அளிக்கிறது. தலைவலி நீங்கியதும், நீங்கள் நன்றாக வேலை செய்ய முடிகிறது.



இன்று உங்கள் ஆபிஸில் பார்ட்டி. மேலதிகாரிகளிடமும், க்ளையண்ட்களிடமும் நல்ல பெயர் எடுக்க வேண்டும். ஆனல் இன்றுதான தலைவலி வரவேண்டும்?


அதிலிருந்து விரைவில் நிவாரணம் பெற அனஸின் சாப்பிடுங்கள். அனஸின் தலைவலியை விரைவில் போக்குகிறது. அனஸின் கைவசம் இருக்கட்டும்.



சக்தி வாய்ந்த, நம்பகமான

அனஸின்

இந்தியாவின்
புகழ் பெற்ற வலி-நிவாரணி



Regd. User of TM: Geoffrey Manners & Co. Ltd.

A-60

வளரும் குழந்தைகளுக்கு வாய்ப்பான துணை இன்க்ரிமின்*!





துள்ளித் திரியும் கன்றுப் பருவம்.. ததும்பி வழியும் சக்தி... பொங்கிப் பெருகும் பூரிப்பான ஆரோக்கியம்!

இதுதான் வளரும் பருவம். உடலும் உள்ளமும் ஓங்கி வளரும் இச் சமயத்தில் உங்கள் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் வழங்கி வாருங்கள். பலனளிக்கும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, அதி முக்கிய அமினோ அமிலம். வளரும் பருவத்தில் அத்தியாவசியமான இவை அனைத்தும் அடங்கியது இன்க்ரிமின் டானிக்.

இன்க்ரிமின்*

இன்க்ரிமின் டானிக் வளரும் பருவத்தினருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர் Lederle ஸயனமைட் இந்தியா லிமிடெட்டின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

SISTAS-INC-3068A TAM


ஸோலோ காதல் மலர்ச்சி...
இளம் காதலர்கள்...!
SOLO
உங்கள் இளமையின் துடிப்பு,
காதல். ஆசை வெள்ளத்தில் மூழ்கி,
காதலுடன் கொஞ்சிக் குலவி,
அள்ளி அருந்திட...
ஸோலோ.
துடிப்புள்ள எலுமிச்சை பானம்!
ஸோலோ
ஸோலோ காதல் பானம்... இளம் உள்ளங்கள் கீதம்!
ADWAVE-KM-104C

அக்கா! ஜெம்ஸினால் விளையாடியது போதும்... இனி அதைத் தின்போமே!



ஆம்! ஜெம்ஸ் என்றாலே குழந்தைகளுக்கு
ஒரு அலாதியான பிரியம்!
பற்பல வண்ணங்களில் இனிமையும் சுவையுமிக்க
முரமுரப்பான மில்க் சாக்கலேட் — ஜெம்ஸ்!

ஆட்டமும் பாட்டமும் களிப்பூட்டுமே,
காட்பரீஸ் **ஜெம்ஸ்** இனிப்பூட்டுமே!

AIYARS-C. 285 TM

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்

உங்கள் மகனின் கனவை நனவாக்குங்கள்



உங்கள் மகன் பெரியவனானதும் எந்தத் தொழில் செய்யப்போகிறான்? என்ஜினியரா? கட்டடக்கலைஞரா? டாக்டரா? வக்கீலா? எதுவானாலும் சரி அதற்கு ஏராளமாகப் பணம் தேவை. அவனது எதிர்காலத்திற்கென்று பணம் சேமித்து வருகிறீர்களா? யூகோ பாங்கில் சேமித்து வாருங்கள்; உங்கள் பணம் பெருகிக் கொண்டே போகும்.

யூகோ பாங்க்
வளம் பெற வழி
வகுத்தளிக்கின்றது

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை அலுவலகம் : கல்கத்தா

UCO-2/73


ராசுவும் வாசுவும்
புதையல் தேடிய
இன்பப் படலம்
சித்திரம் என்ன இது புத்தகத்திலுள் ஆகா! புதையல் பொக்கிஷ வரைபடம்!
உடனே இருவருமே கடலுக்கு ஓடினாரே படகிலேறவே
சிக்கிச் சிதறுண்டு திக்கற்ற தீவினிலே ஒதுங்கினாரே!
பயணம் பல நாட்கள். புயலும் வீசியது.. பயங்கரம்
சுற்றி, சுற்றி அலைந்து ஒற்றைக் குடிசையைக் கண்டனர்
படுத்திருந்த ஒரு கிழவன் படத்தினை வாங்கிப் பார்த்தானும்.
சொக்கும் பழச் சுவைப் பொக்கிஷம் இதுதான் சுவைப்பீர பாப்பின்ஸ்!
சொக்குமின்பம், சொட்டும் இனிமை, பலே ஜோர்
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
5 பழரசச் சுவை வகைகள்—
ராஸ்ப்பெர்ரி, அன்னாசி, எலுமிச்சை,
ஆரஞ்சு, சாத்துக்குடி.
ஒவ்வொரு சுருளிலும் 13
மிட்டாய் வில்லைகள்
PARLE
POPPINS